விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 23 துல்ஹஜ்ஜா 10 இதழ் 136

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-7-1987

## வடமராட்சி சிவில் நிர்வாகத்தில் தாமதம் - லலித்

கொழும்பு, செவ்

நெல்லியடியில் நேற்றுமுன்தினமிரவு நடாத்தப்பட்ட தாக்குதல் வடமராட்சியில் சிவில் நிர்வாகத்தை தாமதப்படுத்தலாம் என தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

திரு. லலித் அத்துலத்முதலி 'ரூபவாஹினி தொலைக்காட்சிக்கு நேற்றிரவு பேட்டியொன்றை வழங்கினர். அப்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சரைப் பேட்டிகண்டவர் வடமராட்சிபற்றி விசாரித்தார். அப்போதே அமைச்

(5ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை கட்டுப்படுத்தப்படும்

### பாலசிங்கம் நம்பிக்கை

[சென்னை]

இராணுவம் வடமராட்சியைத் தனது தாக்குதலுக்கான ஒரு தளமாகப் பயன்படுத்தி வந்துள்ளதாகவும் இதனை விடுவிக்கும் நோக்கிலேயே நெல்லியடி இராணுவ முகாம் தாக்கப்

(5ம் பக்கம் பார்க்க)

# நெல்லியடி ராணுவமுகாம்மீது 'புலிகள்' துணிகரத் தாக்குதல்

## கட்டிடம் தகர்ப்பு; படையினர் பலி!

## கவசவாகனங்கள் சேதம், ஆயுதங்கள் சிக்கின!

யாழ்ப்பாணம், செவ்வாய்

**நெல்லியடி மத்திய மகாவித்தியாலய இராணுவ முகாம்மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினரான ''பிளாக் டைகர்ஸ்'' நேற்றுமுன்தினம் நடத்திய துணிகரத் தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் பலர் கொல்லப்பட்டனர்; மூன்று முகாம் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன. இரண்டு 'சலாடின்' ஆமட் கார் உட்பட மூன்று கவச வாகனங்கள் தீயிட்டு முற்றாக சேதப்படுத்தப்பட்டதுடன் பல நவீனரக ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

**தமது தரப்பில் மூன்றுபோராளிகள் பலியாகியுள்ளனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.**

சுமார் முந்நூறு படையினர் நிலைகொண்டிருந்த மேற்படி இராணுவ முகாம்மீது ஆறு மணி நேரம் இடம்பெற்ற நேரடி மோதல்களையடுத்து நெல்லியடி இராணுவ முகாம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபன் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

''தமிழீழ மண்ணில் சிறிலங்கா ராணுவம் தொடர்ச்சியான தாக்குதல்களில் இறங்கி வருகின்றன. வடமராட்சியில் இராணுவம் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து மிகப் பாரிய இன அழிப்பு நடவடிக்கையில் இறங்கிவருவது தமிழ் மக்கள் அறிந்ததே.

இந்த வகையில் கடந்த 5ம் திகதியன்று இரவு பகலாக இராணுவம் கிராமங்களைச் சுற்றிவளைத்து மக்களை அழிக்கும் நடவடிக்கையில் இறங்கியது. இந்த அழிப்பு நடவடிக்கைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது விரட்டியடிக்கப்பட்ட படையினர் நெல்லியடி முகாமுக்குள் பதுங்கிக்கொண்டனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் எம். பி.யின் மகன் மேஜர் கமல் உட்பட 3 போராளிகள் மரணம்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை முன்னாள் எம். பி. திரு. க. துரைரத்தினத்தின் புதல்வர்மேஜர் கமல் உட்பட மூன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கபோராளிகள் நெல்லியடிமுகாம் தாக்குதல் உயிரிழந்தனர்.

காப்டன் 'பிளாக் டைகர்' மில்லர், வின்சென்ட் ('சரசாலை) ஆகியோர் கமலுடன் இறந்த ஏனைய இரு போராளிகளாவர்.

மேஜர் கமல் ஒரு சிரேஷ்ட போராளியென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் மட்டக்களப்புப்பகுதியில் பலதாக்குதல்களில் ஈடுபட்டவர் என்றுதெரிவிக்கப்பட்டது.

## வீட்டை இழந்தவர் நஞ்சருந்தி தற்கொலை

பலாலி, சனி

மாவிட்டபுரத்தில் தனது வீட்டைப் பார்க்கச்சென்ற நபர் ஒருவர் அவ்வீடு உடைக்கப்பட்ட நிலையில் இருந்ததைக் கண்டு தமது இருப்பிடம் திரும்பிவந்து மனைவியிடம் தாம் பார்த்ததைக் கூறிவிட்டு கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மாவிட்டபுரம் பகுதியிலிருந்து அகதியாக வெளியேறி தெல்லிப்பழை மாத்தனை பகுதியில் வசித்துவந்த விசுவலிங்கம் உலகநாதன் (வயது 32) என்றகுடும்பஸ்தரே தற்கொலை செய்துகொண்டவராவார்.

மரணவிசாரணை அதிகாரி நா.. தம்பிராசா தெல்லிப்பழை

[5ம் பக்கம் பார்க்க]

## டிசம்பர் மாதம் வரை இருப்பார்களாம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் வீமன்காமம் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தாம் டிசம்பர் மாதம்வரைஅப்பகுதிகளில் தங்கியிருக்கப்போவதாக அப்பகுதிக்குச் சென்ற பொதுமக்களிடம் கூறினராம்.

வீமன்காமம் பகுதியில் தமதுவீட்டைப் பார்வையிடச் சென்ற வயோதிபப் பெண்மணிஒருவர் தாம் வீட்டை விட்டு வெளிக்கிட்டு ஆலயத்தில் தங்கியிருந்து பெரிதும் கஷ்டமுறுவதாக தெரிவித்தா

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரம்

## இந்திய நிலைப்பாட்டை சோவியத் ஏற்றுள்ளது

[புதுடில்லி]

இலங்கை தொடர்பாக இந்தியா கொண்டுள்ள கொள்கைகளையும். விமானம்மூலம் நிவாரணப் பொருள்கள் போடும் நடவடிக்கையை மேற்கொண்டதையும் சோவியத் யூனியன் ஏற்றுக்கொண்டிருப்பதாகஅங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியவிமானங்களின் நிவாரண நடவடிக்கைகளின்போது மாஸ்கோவிலிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. திவாரியிடமும்,பின்னர் கடந்த வாரம் மாஸ்கோ சென்றிருந்த இந்தியப் பிரதமர் ராஜீவிடமும் சோவியத் தலைவர் திரு. கோபச்சேவ் உட்பட பல

(5ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற அனுமதியின்றி அவசரகாலச்சட்டத்தை நீடிக்க யோசனை

[கொழும்பு]

இலங்கையில் தற்போதிருக்கும் அவசரகாலச் சட்டம் ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றத்தினுல் புதுப்பிக்கப்படாமலேயே தொடர்ந்து அமுலிலிருக்க வகைசெய்யும் விதத்தில் பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டத்தில்திருத்தம்கொண்டுவரப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதுள்ள சட்டவிதிகளின்படி அவசரகால நிலையை நீடிப்பதற்காக ஒவ்வொரு

(8-ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், செவ்

நெல்லியடி இராணுவமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து கட்டிட இடிபாடுகளுக்குள்ளிருந்து பின்வரும்ஆயுதங்கள்கைப்பற்றப்பட்டுள்ளதாக தமிழீழ விடு

(5-ம் பக்கம் பார்க்க)

## அரசு அறிவிப்பு

கொழும்பு, திங்

நெல்லியடியில்விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் மீது நடத்தியதாக்குதலில்ஏழுஇராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், இருபத்தி நாலுபேர் காயமடைந்துள்ளதாகவும் அரசஅறிக்கையொன்றில்தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இருபத்தி ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கொழும்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலியும், நாற்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவெரித்தாஸ் வானொலியும் நேற்றிரவுதெரிவித்தன.

[ஒ]

## இராணுவம் பெண் கேட்பதாக சௌத்திரியிடம் புகார்

(அச்சுவேலி நிருபர்)

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட ஆயிரக்கான மக்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. சௌத்திரி நேற்று சந்தித்தார். இப்பகுதி மக்கள் தாம் பட்ட துரயங்களை கண்ணீர் மல்க கூறினர். இவர்களில் பெரும்பாலான பெண்கள் வீடுகளிலுள்ள இளம் பெண்களை தமக்குத் திருமணம் செல்துதருமாறு இராணுவம் தொந்தரவு செய்து வருவதாக

(5-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் ஊரடங்குச் சட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

நேற்று மாலை ஆறு மணியிலிருந்து நாளை 8ம் திகதி காலை ஆறு மணிவரை வடமராட்சிப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்படுவதாக யாழ். இணைப்பதிகாரியை மேற்கோள் காட்டி யாழ்ப்பாண வானொலி தெரிவித்தது.

[ஒ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்புத்துறை தபாற் கந்தோரிற்கு அருகில் 1¼ பரப்புக்காணியும் சிறிய வீடும் கிணற்று வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஆ. புவனேஸ்வரி, 86, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். சி-9734

பிரம்பு / சாதாரணகோல் செற்கள், பலவித அலுமாரிகள், கட்டில்கள், மேசைகள், Electric cooker with oven, Towel Rack, Book shelf, Ceiling fan, Easy chair, Mini Ice Cream Beater, Type writer, Water pump மற்றும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு பத்மநாதன், பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9737

84 ஸ்ரீ தொடர்பு இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் C. G. 125 விற்பனைக்குண்டு. 'தேசிகர் இல்லம்' கோப்பாய். [சி 9738]

Calbirds) இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் ரோட், மயிலன்காடு,சுன்னாகம். சி-9705

டிசம்பரில் சனிமாற்றம், ஜோஸ்பரின் சனிமாற்றப் பலன்கள் வெளிவந்துள்ளன. அதிக பக்கங்கள், மூவர்ண அட்டை. மூன்று ரூபா தபால்தலை அனுப்பினால் முகவரிக்கு அனுப்பப்படும். ஐயா சச்சிதானந்தன், 12, விதானையார்வீதி, யாழ்ப்பாணம். சி-9708

ஒகஸ்ட் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் உதவி ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி "பொதுஅறிவு பொதுஉளச்சார்பு" புதிய பதிப்பு 1984, 87 ஆண்டு வினா விடைத்தாள்களையும் உள்ளடக்கியது. விலை ரூபா 49-50, பூபாலசிங்கம்புத்தகசாலை, சிறிலங்கா புத்தகசாலை, சுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப் பெறவிரும்பின் அஸ்ரன்இன்ஸ்ரிரியூட் 101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சி-9554

நல்ல நிலையிலுள்ள 25 சிறி 7000 தொடரிலக்கமுடையதும் 25 சிறி 8000 தொடரிலக்கமுடையதுமாக இரு மெசிபேக்குசன் 135 உழவு இயந்திரங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமரேசு அச்சுவேலி வடக்கு அச்சுவேலி அல்லது அனிற்ரு ஸ்ரோர்ஸ் & கூல்பார் கோப்பாய். சி-9649

A/L மாணவர்களின் நலன் கருதி பிரபல ஆசிரியர்களின் தொகுப்புக்களாக மீண்டும் வெளியாகிவிட்டன நியூ ஸ்டார் வெளியீடுகள். கணக்கியல் கோட்பாடுகள், வணிகமும் நிதியும் (நடைமுறை விடயங்களுடன்). பொருளியல் வினா விடை யாழ்நகரிலும், சாவகச்சேரியிலும் சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். (சி 9648)

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் ஸ்தாபனத்திற்கு முகவர்கள், பிரதிநிதிகள் தேவை. படித்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 18 முதல் 40 வரை. கல்வித்தகைமை மற்றும் விபரங்களுடன் ஒருகிழமைக்குள் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 9728 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-9728

## தேவை

யாழ்.நகரிலுள்ள பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள பெண் லிகிதர் தேவை. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவரும், கணக்கியல் அனுபவமுள்ளவரும், தட்டெழுத்து வேலையில் அனுபவமுள்ளவராகவும் இருக்கவேண்டும் வயதெல்லை 20-30 யாழ்.நகர சூழலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன் அனுபவங்களையும், தகைமைகளையும் குறிப்பிட்டு சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:விளம்பர இல ஏ 136, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம்.(ஏ 136)

## வகுப்புக்கள்

1988, G.C.E. O/L ஆங்கிலப் பரீட்சை. புதிய பாடத்திட்டம். Year 8, 9, 10 ஆங்கிலப் பாடப் புத்தகங்களின் அடிப்படையில் வகுப்புக்கள் ஆரம்பம். தொடர்புகொள்க: S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (சி-9522)

108,Brown Rd, Jaffna A/L 88 சேதன இரசாயனம் ஆசிரியர் சதீஸ் ஆரம்பம் 8-7-87 புதன். 4-45 p. m. (திங்கள், புதன்,4.45 P.m ) (சி 9700)

Radio-TV, Air conditioning, Refrigeration, வயறிங், பிளம்பிங், மோட்டர் மெக்கானிசம், வைன்டிங், தட்டெழுத்து-சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் செய்முறை பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்) 328, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். சி-9726

## WANTED

Wanted two nursing sisters with experience in theatre work apply: Central Nursing Home, Thirunelvely. C-9735

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் [கொடிகாமம்] 7000 க்கு மேலான வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 150/- முற்பணம் கட்டி கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவேண்டும். 15-07-87ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை பூரணப் படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும். பொருள்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்

எ-142

## நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்

நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின்2ம் பிரிவின் கீழ் 1987ம் ஆண்டுக்கு ஏக்கரொன்றுக்குப் பின்வரும் நீர்ப்பாசனக் கட்டணங்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள திட்டங்களின் குளக் குறியீட்டேட்டிலுள்ள காணிகளுக்கு விதிக்கப்படுகின்றது

காலபோகமும் சிறுபோகமும்ஆகியஇரண்டும் செய்கை பண்ணப்படும்

காணிகளுக்கு ரூபா 100/-

ஏதாவதொரு போகம் மாத்திரம் செய்கை பண்ணப் படும்

காணிகளுக்கு ரூபா 60/-

திட்டங்களின் பெயர்கள்

1. இரணைமடுக்குளம்.
2. அக்கராயன்குளம்.
3. கல்மடுக்குளம்.
4. கரியாலைநாகபடுவான்குளம்.
5. புதுமுறிப்புக்குளம்.
6. பிரமந்தலாறுக்குளம்

மேலதிக அரசாங்க அதிபர், (காணி)

பிரதிக்காணி ஆணையாளர்,
அரசாங்க அதிபருக்காக,
கிளிநொச்சி மாவட்டம்.
கச்சேரி, கிளிநொச்சி

(சி-143)

## முதல் வருட நினைவஞ்சலி

ஆசிரியர் M. G. யோசேப்

மலர்வு: 30- 12- 1933
உதிர்வ: 07- 07- 1986

மனிதரில் மாணிக்கமாய் விளங்கி குடும்பத்தில் ஒளியாய்த் திகழ்ந்து மாணவர்க்கு நல் ஆசானாகி- நற்பிரஜைகள் பலரை உருவாக்கிய எங்கள் அன்புத்தெய்வமே! நீ மறைந்த போதும் நீ காட்டிய நல்வழியை என்றுமே மறவோம். அன்பும் கனிவும் நிறைந்த எம் தந்தையே- எம் வாழ்வில் வழிகாட்டிய வள்ளலே- நீ இறைவனில் சாந்தியடைய இறைவனில் இறைஞ்சுகின்றோம். ஓராண்டு சென்றாலும், உமது பிரிவால் துயருறும்,

தாய் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் 07- 07-1987 பிற்பகல் 5-30 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் பங்கு கொண்டு அவரின் ஆன்மா இறைவனில் ஒளிபெற வேண்டுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (சி-9733)

## திருவுருவச்சிலை திறப்புவிழா

பண்டத்தரிப்பு திங்கள் வண. யோசவ் வாஸ்அடிகள் இலங்கைக்கு வந்த 300 ம் ஆண்டு நினைவாக சில்லாலை புனித. கதிரை மாதா ஆலயத்தில் அன்னாரின் திருவுருவச்சிலை திறப்பு விழா கடந்த ஞாயிறு நடைபெற்றது.

சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு ப. இருதயதாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் முன்னாள் திருகோணமலை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதி வண. எல். ஆர். அன்ரனி ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வண. யோசவ் வாஸ் அடிகளாரின் திருவுருவச்சிலையைத் திரை நீக்கம் செய்துவைத்தார்.

## ஓராண்டு நினைவஞ்சலி

செல்வன்
யே. வில்பேட்
மோகன்ராஜ்

தாயின்மடியில்; 23- 8- 64
தாயகமண்ணில்: 7- 7- 86


அன்பே உருவானாய்-
அவனியில்
அறத்தின் சிகரமானாய்
பண்பே சிறந்ததென்று-
எமக்கு
பாதை காட்டிச்
சென்றாய் நீ
கடமையே கண்ணாகி-
கழகத்தின்
கருத்தையே மூசசாக்கி
இரவும் பகலும்
எம்மோடு இருந்து
துயர் நீக்க அரும்பாடு
பட்டாய்
நண்பர்க்கு நண்பனாகி-
ஊரின்
உயர்ச்சிக்கே-உயிரானாய்
உயிரைக்கொடுத்து
எம்மை வாழ
வழிசெய்தனையோ
மண்ணில் நீ மறைந்தாலும்- இன்று
விண்ணில் நீ ஒளியானாய்
மாதங்கள் ஆறிரண்டானாலும் நண்பர்கள்
நாம் உம்மை- மறவோம்
மறவோம்

இவரின் ஆன்ம சாந்திக்காக இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் 7-7-87 அன்று பிற்பகல் 5-30 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் பங்கு கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுமாறு அழைக்கின்றோம்.

இளைஞர்
புனித தொன்பொஸ்கோ
கழகம்,
இளவாலை.

(சி- 9718)

## ஓராண்டு நினைவஞ்சலி



முருகேசு
கிருபானந்தம்
(இமாம்)

தாயின்மடியில்: 8- 9- 1955
மண்ணின் மடியில்: 7- 7- 1986

ஓராண்டு போச்சுது உன்கவலை தீரவில்லை. குலவிளக்காய் வந்துதித்து குதூகலத்தை எமக்களித்தாய் தமிழுக்காக பலகாலம் தலைநிமிர்ந்து பாடுபட்டாய். ஈழக் கடலினிலே நீ மறைந்தாய். ஆற்றொணாக் கடலினிலே எம்மை அலைய விட்டுச்சென்று விட்டாய்! மீண்டிங்கு வந்து மாளும் எங்களை மகிழ்விக்கமாட்டாயா? என்று கண்ணீர் பூப்போட்டு கடவுளிடம் கையேந்தி நிற்கிறோம்.

கண்ணீரில் வாழும் உன் தந்தையும், சகோதரிகளும், அத்தான்மாரும், மருமக்களும், நண்பர்களும்.

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி.

[சி- 9836]

## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்

## கல்வி ஆண்டு 87/88

புதிய கல்வி ஆண்டு வகுப்புக்கள் 1-7-87ல் ஆரம்பமாகிவிட்டன. சகல மாணவர்களும் உடனடியாக தவணைப்பணத்தை செலுத்தி, பெயர்களைப் பதிவு செய்து, தொழில்நுட்பக் கல்வியை/பயிற்சியை தொடருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பணிப்பாளர்,

[எ-130]

## வரவேற்பு உபசாரம்

நிகழும் பிரபவ வருடம் (06 - 07 - 87) திங்கட்கிழமை எனது மகள் உசேனி அவர்கட்கும், திரு. நமசிவாயகம் றவீந்திரனுக்கும் நடந்தேறிய திருமண வைபவத்தையொட்டி எமது இல்லத்தில் 08 - 07 - 87 புதன்கிழமை மாலை 4 மணிமுதல் 6-30 மணிவரை நடைபெறும் வரவேற்பு உப்சாரத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

இங்ஙனம்,
தங்கள் நல்வரவைவிரும்பும்,
திரு. திருமதி த. சபாரத்தினம் தம்பதிகள்.
கிராமசேவகர் அலுவலகம்,
மானிப்பாய்.

எ-141

## வேலைக்கு ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள

புளோவர் [Blowers]
கெல்பர் [Helpers]
பபுளர் [Bubblers]

போன்றவர்கள் உடனடியாகத் தேவை.

16—19 வயதிற்குமிடைப்பட்ட ஆண்கள் வேலைபழகுவதற்கும் தேவை.

உடன் விண்ணப்பிக்கவும்.

சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி.

[சி-9696]

# தென்ஆபிரிக்காவின் இன ஒதுக்கலை

## ஸிம்பாப்வேயும் ஸாம்பியாவும் எதிர்த்துப் போராட உறுதி

## இனவெறி ஆட்சிக்கு கட்டாய தடை விதிக்க கோரிக்கை

லுசாக்கா, ஜுலை. 6

**தென்ஆபிரிக்காவில் இனஒதுக்கலை எதிர்த்துப் போராடுவதற்கு ஸாம்பியாவும், ஸிம்பாப்வேயும் உறுதி பூண்டுள்ளன.**

லுசாக்காவில் சந்தித்து பேச்சு நடத்திய ஸிம்பாப்வே பிரதமர் திரு. றொபேர்ட் முகாபேயும் ஸாம்பியா அதிபர் திரு. கெனத் கௌண்டாவும் இன ஒதுக்கலை எதிர்க்க உறுதிஎடுத்துக் கொண்டனர்.

தென்ஆபிரிக்க இனவெறி ஆட்சிக்கு மேற்கத்தியநாடுகள் தொடர்ந்தும் ஆதரவளித்து வருவது குறித்து கவலை தெரிவித்த இருதலைவர்களும் மேற்கு நாடுகளுக்கு கீழ்க்கண்ட கோரிக்கையையும்விடுத்தனர்.

இனஒதுக்கல் நடவடிக்கைகளைக் கைவிடச் செய்வதனை வலியுறுத்தும் பொருட்டுதென் ஆபிரிக்க இனவெறி ஆட்சிக்கு எதிராக மேற்கத்திய நாடுகள் கட்டாயத் தடைகளைவிதிக்க வேண்டும். இவ்வாறு செய்வதை விடுத்து இனஒதுக்கல் கொள்கைக்கு ஆதரவளிப்பது போன்று மேற்கு நாடுகள் தொடர்ந்தும் தென்ஆபிரிக்க அரசுக்கு ஆதரவளித்து வருவது மிகவும் கண்டிக்கப்பட வேண்டும்.

## இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் ....

### ஸெயில்சிங் எச்சரிக்கை

புதுடில்லி, ஜுலை 6

"இந்தியா தனது உள்விவகாரங்களில் எந்தவொரு வெளி தலையீட்டையும்அனுமதிக்காது அதன் பாதுகாப்பிற்குஅச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் தனது நிலையை உணர்த்தவும் தயங்காதென்று இந்திய ஜனதிபதி திரு. ஜானி ஸெயில் சிங் தெரிவித்துள்ளார்".

ராஜஸ்தானில் நடைபெற்ற பொது வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்குஅவர் மேலும் பேசுகையில்; எமது பிரச்னைக்கு தீர்வு காணும் நிலையில் நாம் இருக்கிறோம். எந்த வெளிநாட்டு உதவிக்காகவும் எமது கொள்கைகளை நாம்விட்டுக் கொடுக்க மாட்டோம் என்றும் கூறினர்.

இந்தியா முன்னேறுவது சில தீயசக்திகளுக்கு பிடிக்கவில்லை. மொழி, மதம், சாதிகளின் பெயரால் நாடு வலுவிழக்க மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்களென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். [சி]

## எல்லைக்காந்தியின் உடல்நிலை கவலைக்கிடம்

புதுடில்லி, ஜுலை 6

புதுடில்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கானின் உடல் நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாகவே உள்ளதாக புதுடில்லி ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## நோர்வே பிரதமர்

புதுடில்லி, ஜுலை 6

நோர்வே பிரதமர் திருமதி பிரெண்ட்லன்ட் 2 நாள் விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி வந்துள்ளார்.

சுற்றுசூழல் வளர்ச்சிக்கான உலக கமிஷனின் இரண்டுநாள் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு இங்குவந்துள்ள நோர்வே பிரதமர் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் இருதரப்பு விடயங்கள் சர்வதேச விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்துவார்.

மேற்படி கமிஷனின் தலைவி திருமதி பிரெண்ட்லண்ட் ஆவார்.

## பாக். இராணுவ ஆட்சி 10 வருடநிறைவு

## லாகூரில் குண்டு வெடித்து 7 பேர் பலி!

லாகூர், ஜுலை. 6

லாகூரில் இடம்பெற்ற தொடர்ச்சியான குண்டு வெடிப்பையடுத்து 3சிறுவர்கள் உட்பட 7 பேர் பலியாகினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி இடம் பெற்று தற்போதைய ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் ஆட்சியைக் கைப்பற்றிய 10வதுஆண்டைக் குறிக்கும் நேற்றையதினத்தை 11 எதிர்க்கட்சிகள் கூட்டணி கறுப்பு நாளாக அனுஷ்டித்தது.

இக்கறுப்புநாள் அனுஷ்டிப்புக் காரணமாக இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது

லாகூர் ரயில் நிலையத்திற்கு வெளியிலும், பஸ் நிலையத்திலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களினல் 50க்கு மேற்பட்டோர் காயமடைந்தன.

## இந்தியாவுக்கு சோவியத் 'மிக்29'

புதுடில்லி, ஜுலை 6

சோவியத் யூனியனின் நவீன தயாரிப்பான 'மிக்-29' ரக யுத்த விமானங்களை இந்தியாவுக்கு சோவியத் யூனியன் வழங்கியுள்ளது.

இந்தியாவின் பாதுகாப்புப் பிரிவில் அதிகளவில் சோவியத் இராணுவ தளபாடங்களே உள்ளன. இந்தியாவுக்குத் தேவையான 'மிக்-23', 'மிக்-25' ரகயுத்த விமானங்கள், சரக்கு விமானங்கள், ஹெலிகொப்டர்கள், 'டி-72' டாங்கிகள், நீர்மூழ்கிப் கப்பல்கள் மற்றும் பல இராணுவ தளபாடங்களை சோவியத் யூனியனே வழங்கியுள்ளது.

சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் 'வார்சோ' உடன்படிக்கை செய்துள்ளது. இதன்படி சோவியத் இராணுவ தளபாடங்களை பெறும் முன்னுரிமை 'வார்சோ' நாடுகளுக்கே உரியது, எனினும் 'வார்சோ' நாடல்லாத இந்தியாவுக்கும் 'மிக்-29' ரக யுத்த விமானம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி

## தமிழ் தீவிரவாதிகளை அழித்தொழிக்க

## சீன உதவியை இலங்கை நாடியுள்ளதா?

## இந்தியாவுக்கு திட்டவட்டமான தகவல் இல்லை என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, ஜுலை. 6

"தமிழ்த் தீவிரவாதிகளை அழித்தொழிப்பதற்காக இலங்கை அரசு சீனவிடமிருந்து இராணுவ உதவிகளைக் கோரியுள்ளமை குறித்து இந்திய அரசுக்கு எதுவிததகவலும் திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை".

இவ்வாறு இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி புதுடில்லி விமானநிலையத்தில் வைத்து பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்

மாஸ்கோவில் உத்தியோக பூர்வவிஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பிய திரு. காந்தி புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

## வளைகுடாவிலிருந்து

## ரஷ்ய கப்பல்கள் அழைக்கப்பட்டால் அமெரிக்காவும் வாபஸ்பெறும்

### வெள்ளைமாளிகை அதிகாரி நிபந்தனை

வாஷிங்டன். ஜுலை 6

ஈராக்-ஈரான் யுத்த நிறுத்தம ஏற்படவேண்டும். சோவியத் யூனியன் வளைகுடாவில் நிலைகொண்டிருக்கும் தனது போர்க்கப்பல்களைத் திருப்பி அழைக்கவேண்டும்.

இவ்விரு நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டால் அமெரிக்கா வளைகுடாவிலிருந்து தனது போர்க்கப்பல்களை திருப்பி அழைக்கக்கூடும்.

இவ்வாறுஅமெரிக்கவெள்ளை மாளிகை தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்கூறிபதாவது:

ஈராக்-ஈரான் யுத்தத்தை நிறுத்துவதற்கு ஐ. நா. பாதுகாப்புச்சபை யுததநிறுத்தத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருநாடுகளினதும் உடன்பாட்டைப் பெறவேண்டும் இது சிறந்தபலனை அளிக்கும்.

ஈராக்-ஈரான் படை வீரர்கள் தமது சர்வதேச எல்லைகளுக்குத் திரும்பிச்செல்ல வேண்டும். யுத்தக்கைதிகளை இருநாடுகளும் விடுதலைசெய்ய வேண்டும். இதன் பின்னரே வளைகுடாவில் நிரந்தரஅமைதி நிலவும்.

## 'பற்காஷ்' விம்பிள்டன் டென்னிஸ் சாம்பியன்

லண்டன், ஜுலை 6

விம்பிள்டன் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 22 வயதான பற்காஷ் விம்பிள்டன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

முன்னுள் 'விம்பிள்டன் சாம்பியனும 5 தடவைகள் இப்போட்டிகளில் வெற்றி பெற்றவருமான செக்கோசிலாவாக்கியாவைச் சேர்ந்த இவன் லெண்டலை (வயது 27) பட்காஷ் 7-6, 7-2, 7-5 என்ற புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றுர்.

பற்காஷ் 1 லட்சத்து 55 ஆயிரம் பவுண் ரொக்கப் பணமும் வெற்றிக் கிண்ணமும் பரிசாகப் பெற்றுர். லெண்டலுக்கு 77 லட்சம் பவுண் ரொக்கப் பணம் கிடைத்தது.

இரண்டே முக்கால் மணி நேரம் நடைபெற்ற இப்போட்டியில் பற்காஷ் அபாரமாக ஆடி ரசிகர்களின் பாராட்டையும் பெற்றுர். இப்போட்டியில் ஏற்பட்ட தோல்வி லெண்டலுக்கு பெரும் ஏமாற்றமாகி விட்டது.

## சமய அறிவுநூல்களை

## சிறுவயதிலேயே மனனம் செய்யவேண்டும்

(உடுவில்)

'சிறிய வயதில் விளக்கமில்லாவிடினும் நெட்டுருப் பண்ணிக்கொள்ளும் விடயங்கள் அவர்களின் வளர்ச்சிக் காலத்தில் விளக்கமடைவதுடன் பயன்படவும் செய்யும். எனவே சின்னவயதில் சைவ விஞவிடை, ஆத்திசூடி, நல்வழி போன்ற பாடல்களை பிள்ளைகளுக்கு பெற்றேர்கள் மனனம் செய்யப் பழக்கவேண்டும்".

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலய சிவஞானவாரியம் சைவப்பிள்ளைகளுக்கு நாடத்திய ஆத்திசூடி மனனஇறுதிப் போட்டிகளில்கலந்துகொண்டு உரையாற்றிய திரு வி. பரிபூரணனந்த சர்மா இவ்வாறு கூறினர்.

கோவில் ஆதீனகர்த்தாவும் வாரியத் தலைவருமான பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமிசர்மா தலைமையில் போட்டி நடைபெற்றது.

திரு. வி. பரிபூரணனந்த சர்மா மேலும் பேசுகையில், இன்றைய சிறுவர்களிடையே இது போன்ற கருத்துள்ள பாடங்கள் போதிக்கப்படுவதில்லையென்றும் இது போன்ற சமயஸ்தாபனங்கள் மூலமாவது அவற்றை சிறுவர்களுக்கு ஊட்ட முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

போட்டிகளில் கலந்துகொண்ட சிறுவர்களுக்கு மேற்படி கோவில் தேர்த்திருவிழாவன்று இம்மாதம் 9ம் திகதி பரிசுகள் வழங்கப்படும்.

தொழிலதிபர் திரு. க. கனகராசா பரிசுகளை வழங்குவார்.

சிவஞானவாரிய செயலாளர் திரு. எம் எஸ் ஸ்ரீதயாளனும் உரைநிகழ்த்திஞர். (மா)

## மாறுவேடத்தில் இராணுவம்

(பூநகரி நிருபர்)

பூநகரி இராணுவத்தினர் சாரம், சேட் அணிந்து சிவில் உடையிலும் ஆயுதங்களைச் சாக்கில்போட்டு மறைத்து வைத்து மாறுவேடத்தில் சங்குப்பிட்டித் துறையிலும், பூநகரி பிரதான வீதிகளிலும் நடமாடித்திரிகின்றனர்.

இவர்கள் முக்கியமாக, சங்குப்பிட்டித்துறையில் வரும் போகும் பிரயாணிகளை அவதானிக்கின்றனர்.

## உண்ணுவிரதம்

(ஒட்டுசுட்டான் நிருபர்

ஈழப்போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டுமெனக்கோரி கற்சிலைமடு நாகம்பாள் கோவில் முன்றலில் கடந்த 2ம் திகதியன்று உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த உண்ணுவிரதத்தில் மாணவ, மாணவிகள் விவசாயிகள், தொழிலாளர்கள், மலையக மக்கள் கலந்துகொண்டனர்.

### மணிவாக்கு

தனது நோக்கம் நிறைவேறமுடியுமானுல் சாத்தான் திருமுறைகளிலிருந்து மேற்கோள் காட்டத்தயங்க மாட்டான்.

—ஷேக்ஸ்பியர்

# நமது நோக்கு

## பயனற்ற காரியமா?

எல்லாம் சரி,

வடமராட்சியில் சிவில் நிர்வாகத்துக்கு இராணுவப் பின்னணியுடன் ஆயத்தங்கள் ஜரூர். உள்ளூராட்சி தேர்தல்களும் நடத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

மற்ற வகையில் "ஒபரேஷன் லிபரேஷன் மூன்றும் கட்டத்தை" ஆரம்பிப்பதற்கு ஆயுதப்படைகள் தயாராகவுள்ளன. ஆக மேலிடத்திலிருந்துஉத்தரவு கிடைப்பதுதான் பாக்கி!

இதேவேளை தமிழ்ப் போராளிகள் மீண்டும் தம்மைத் தயார்படுத்திக் கொண்டு வருகிருர்கள். எந்த நிமிடத்திலும் ஒரு பெரும் தாக்குதலில் அவர்கள் ஈடுபடக் கூடுமென கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன.

ஓர் உண்மையை யாரும் மறைத்துவிட முடியாது-

இந்திய உணவுக்கப்பல்கள் இங்கு வந்ததின் பின்னர், அசாதாரண அமைதியொன்று உருவாகிவருகின்றது என்பதே அது.

இந்திய நிவாரணப் பொருள்கள் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டு முடியும்வரை போர் நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடிக்கப்போவதாக போராளிகள் ஏற்கனவே அறிவித்திருப்பதுதெரிந்ததே. எனவே அவர்கள் தன்னிச்சையாக அதனை மீறுவார்கள் என்று கூறமுடியாது ஆனுல் அரச படைகளும் இதனைத்தம்மளவில் கடைப்பிடிக்க வேண்டும். மீறும் பட்சத்தில் எதிர் நடவடிக்கைகளில் இறங்குவதைத்தவிர்க்கமுடியாது எனவும் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

ஆனுல் அடிக்கடி ஆங்காங்கே சம்பவங்கள் நிகழாமல் இல்லை. எனினும் பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதல் குறிப்பிட்டஅளவில் குறைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அதேசமயம் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் விமானத்தாக்குதல்கள் நடக்காமலில்லை, ஆனையிறவு, முல்லைத்தீவு, மட்டக்களப்பு எனப் பல பகுதிகளிலிருந்தும் சம்பவங்கள் பற்றிய செய்திகள் பிந்தியாகிலும் கிடைக்கவே செய்கின்றன.

எனவே போர்நிறுத்தம் ஒருதலைப்பட்சமாக இருந்து வருகின்றது என்பதும்அரச தரப்பில் அவர்கள் அதனை மதிக்க வில்லையென்பதும் கண்கூடு. உயர்அதிகாரியின் அனுமதியுடன், வெள்ளைக் கொடிதாங்கியபடி சென்ற வீமன்காமம்கல் லூரிஅதிபர் சுடப்பட்டு படுகாயம் அடைந்துள்ள சம்பவம் ஒன்றே போதும், அரச படைகள் என்ன மனநிலையில் இருக்கிருர்கள் என்பதை அனுமானிப்பதற்கு. அதாவது மேலிடத்திலிருந்து உத்தரவு கிடைத்தவுடன் ஆயுதப்படைகள் மீண்டும் பழைய பாணியில் எஞ்சியுள்ள இடங்களின் மீது தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முனைப்போடு இருக்கிருர்கள் என்பதையே இது காட்டுகின்றது.

வெளிநாடு சென்று திரும்பியுள்ள தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியும் இதற்கு அமைவாகவே கருத்து வெளியிட்டுவருகின்ருர். "எவரது நெருக்குதலின் மீதும் நாம் எமது நடவடிக்கைகளை நிறுத்திவிடவில்லை, எந்த நிமிடத்திலும் மீண்டும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதற்குத் தயங்கப்போவதில்லை" என்ற வகையில் அவர் கருத்து வெளியிட்டிருக்கிருர்.

இதேவேளை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக இந்தியப் பிரதமமந்திரி இலங்கை ஜனுதிபதிக்கு கடைசியாக அனுப்பிய யோசனைகள் மீது இலங்கைத் தலைவர்கள் ஆலோசனைகள் நடத்திவருகிருர்கள் என்பது பகிரங்க உண்மை! இந்த உண்மையின் அடிப்படையில் மீண்டும் முன்போல் ஒரு தாக்குதலை ஆரம்பிப்பது இலங்கைக்கு சாதகமாக இருக்காது என்பதை மனம் கொள்ளவேண்டும்.

ஏனெனில் ஆரம்பம்முதல் இந்நாட்டு இனப்பிரச்னைக்கு அமைதி முறையில் தீர்வொன்றினை உருவாக்க வேண்டுமென்பதே இந்தியாவின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. அக்கொள்கையின் அடிப்படையிலேயே தன் கருத்துக்களையும் வலியுறுத்தி வந்துள்ளது. அது உதாசீனம் செய்யப்பட்ட நிலையில்தான் நிவாரண உதவி என்ற வகையில் விமான ஊடுருவல் நிகழ்ந்தது

இதனை சின்னவிடயமாக யாரும் கருதிவிடமுடியாது.

எனவே அரச படைகள் திட்டமிட்டபடி தனது மூன்ரும் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாயின், மக்கள் மீண்டும் அல்லோலகல்லோலப்பட்டு இருப்பிடங்களை விட்டு ஓடுவதாயின், நூற்றுக்கணக்கானவர்கள் உயிர்களை இழப்பதாயின், வீடுகள் சொத்துக்கள் நாசமாவதாயின் வெளியார் கண்டனத்தையும் வெளிப்படுத்தாமல் இந்திய அரசு இலங்கையின் வான வீதியில் நுழைந்து நிவாரணப் பொருள்களைப் போட்டதெல்லாம் பயனற்ற காரியங்கள் என்றே ஆகிவிடும்...

தீர்க்கமான ஆலோசனையின்பின் எடுக்கப்பட்ட இந் நடவடிக்கைகள் பயனளிக்காமல் போகாது-போகக் கூடாது என்பதே எமது கருத்து.

## மன்னரில் பிரெஞ்சுவைத்திய நிபுணர்கள்

(மன்னர் நிருபர்)

மன்னருக்குப் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் குழுவொன்று வந்துள்ளது.

இவர்கள் பேசாலை, அடம்பன், முருங்கன் ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்றும் மன்னரில் நடமாடும் சிகிச்சை நிலையங்களை ஏற்படுத்தியும் நோயாளருக்குச் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இன்று நவாலியூர் சோமசுந்தரப்புலவர் நினைவுதினம் :

# செந்தமிழ்ச்சோலையில்

# ஒரு கற்பக தரு

பண்டிதமணி **சி. கணபதிப்பிள்ளை**

'செந்தமிழ் மக்களே வாரீர்', என்று ஒரு தமிழ்க் குரல் கேட்கின்றது, பழக்கமான குரல். 'கூடிப் பனங் கட்டிக் கூழுங் குடிக்கலாம், கொழுக்கட்டை தின்னலாந் தோழர்களே', என்று முன்ஞெருநாட் கூப்பிட்ட குரல் அந்தகுரல். தெய்வக் குழந்தைகளே! எங்கள் தெய்வத் தமிழ் மொழிச் சீரினைத் தேரீர்' என்று பின்னையும் இனிக்கின்றது அந்தக்குரல்...

அதோ! தமிழ்த் தாத்தா காட்சியளிக்கின்ருர். வங்கத் தாத்தாவை அறிந்திருக்கிறீர்கள். நமது தாத்தா தங்கத் தாத்தா. தங்கம் என்ருல் ஈழம். ஈழம்—இலங்கை. தாத்தாக்கள் எப்போதுந் தாடியிலே வெகு கவனம். மருந்துக்கும் கறுப்பில்லாத வெள்ளித் தாடிக்குக் கண்ணூறு வந்து விடுமோ என்றுதான் சதா பயம். எங்கள் தாத்தாவின் புத்தியைப் பாருங்கள்! தாடியறுந்த கதையுடன் வருகிருர். குழந்தைகளே! காரியம் விளங்குகின்றதா? தங்கமான தனது வெள்ளித் தாடியை கண்ணூறு பார்த்து விடுவீர்களாம், கையாற் பிடித்து இழுத்து விடுவீர்களாம், தாடியறுந்த கதை குழந்தைகளுக்குக் கறுத்தப் பொட்டுப் போலத் தம்மைக் கண்ணூறு படாமற் பாதுகாக்குமாம். கத்தரித் தோட்டத்துக்குக் கண்ணூறு வராமல் 'வெருளி' கட்டி வைத்த தாத்தாவின் புத்தியென்ன புத்தி! தங்கப் புத்தி...

தாத்தாவின் ஹாஸ்யத்தை ஒருக்காற் கேளுங்கள். 'எங்கே யெங்கே ஓடுகிருய் அம்புலியே' என்று தமது மாசுமறுவில்லாத தாயைக் காட்டி உங்கள் அம்புலியை ஓட்டிக் கலைக்கிருர் தாத்தா. மாசுமறுவுள்ள அந்த அம்புலி சற்றே நின்றுகூடக் கதைக்காமல் குளித்துவிட்டு வரும் பொருட்டு 'நான் கடல்மேல் ஓடுகிறேன் பிள்ளைகளே' என்று சொல்லிக் கொண்டோடுகின்றது. தாத்தாவின் தாடியைப் பார்த்துப்பார்த்துஓடுகின்றது. பாவம்! அம்புலியின் கறுப்பு எப்படி வெளுக்கப் போகின்றது! காகங் குளித்து முழுகித் தானே வருகின்றது. இன்னுங் கொக்காகவில்லையே! எப்படியிருக்கிறது, தாத்தாவிடத்தே அம்புலி படுகிறபாடு. தாத்தாவுக்குத் தாடி நரைத்துவிட்டது ஆனுற் கருத்துக்கள், கற்பனைகள் நரைக்கவில்லை. இளமைக் கட்டோடு மிளிர்கின்றுன அவைகளுக்கு நரை திரை மூப்புக்கள் இல்லை...

'முதியோரைக் கனம்பண்ண வேண்டும்' என்றல்லவா உங்கள் பாட்டியுங்களுக்குப் போதித்திருக்கின்ருள். தமிழ்த் தாத்தாவைச் சூழ்ந்து தாழ்ந்து பணிந்து உங்கள் மரியாதையைச் செலுத்துங்கள். தாத்தா உங்களுக்குக் கொடுப்பதற்கு எத்தனையோ இனிக்கிற நல்ல பண்டங்கள் கொண்டு வந்து வைத்திருக்கின்ருர். தாத்தாவுக்குக் குழந்தைகளென்ருல் உயிர். அதோ! செந்திநாதனைப் பாருங்கள்! அவல் முடிச்சுக் கண்ட கண்ணன் போல வருகின்ருன்.

'மலர்ந்த முகமும் குளிர்ந்த
விழியும்
வாயிற் சிரிப்பும் மனத்திலே
கலந்த மகிழ்வுமாக நீவருங்
காரணமென்ன தோழனே'

என்று அவனை நிறுத்திவிசாரியுங்கள்.

'மாம்பழம் நல்ல மாம்பழம்
அப்பா
வாங்கித் தந்த மாம்பழம்
மாம்பழம் இது காணக்
காண
வாயினிக்கிற மாம்பழம்.

செந்தி வாயூறுகின்ருன். தாத்தா முதலில் உங்களுக்கு மாம்பழம் வழங்குகின்ருர்.

'தீம்பழ மிதைச் சீவி
வெட்டிச்
சிரித்துச் சிரித்துத்
தின்னுங்கள்

'அருமையான மாம்பழம், இன்பமுடனே தருவேன் தெய்வம் இருக்குமிடத்தைக் கூறுவாய்,' என்று தனித்தனியொவ்வொரு கேள்வி தாத்தா கேட்பார். கவனம்! காசு பணம் குழந்தைகளிடம் கேட்கிற வழக்கம் தாத்தாவுக்கில்லை......

செல்வக் குழந்தைகளே! உங்களுக்கு நித்திரை வந்தால், 'ஆராரோ ஆரிவரோ' கூடத் தாத்தா பாடிச்

'சீருஞ் சிறப்புந் திருவும்
பெருகவந்த
ஆரும் விரும்பும் அரு
மருந்தே கண்வளராய்'
'மாமி அடித்தாளோ
மாமனுர் ஏசினரோ
பூவிற் சிறந்தசெல்வப்
புத்தமுதே கண்வளராய்'

என்று உங்களைக் கண்வளரச் செய்துவைப்பார் தாத்தா. பொழுது புலரமுன்னே உங்களை நித்திரையின்றும் எழுப்பியும் விடுவார் தாத்தா, காலையில்,

'மன்னிய மலர்வகை சிரிப்
பனபோல
வாய்மலர் கின்றன வண்டு
களுதும்:
அன்னங்கள் தாமரை மலர்
மிசைத் தாவும்
அழகிய குயிலினம் மகிழ்
வுறக் கூவும்'

தாத்தாவின் அருமையையின்னுங் கேளுங்கள். 'தயிர்க் கடலிலே வெண்ணெய் போன்ற' சந்திரன் 'எண்ணிரண்டு கலையுடனே எழுந்து நிலாப்' பொழிவான். அந்த வேளையில் வெள்ளை மணலிலே தாத்தா இருந்துகொண்டு, உங்கள் மிருதுவான காதுகள் ஊறவூறப் 'பருத்தித்துறையூராம், பவளக்கொடிபேராம்'

என்று இனிய நறியபாட்டிலே சுவையான கதைகளுஞ் சொல்லுவார். 'ஏராயம் புடைசூழ இருந்து தன்னைப் புளுகும் பூராய முதலியார்' கதையைக் கேட்டுப் புலாலுண்பதை நீக்கிவிடுங்கள். 'பிள்ளையைப் போல் வளர்த்துப் பின்னையந்தச் சண்டாளர் துள்ளித் துடிதுடிக்கத் துண்டாக வெட்டின, வாயில்லாச் சீவனின் மாதா பட்டபாட்டைக் கேளுங்கள்! அப்போது புலாலுண்பதை நீங்கள் முற்ருய் நீக்கிக்கொள்வீர்கள்.

கொழுக்கட்டை மறந்தவன் கதையைச் சற்றே வாயிலிட்டுப் பாருங்கள். ஆடிப்பிறப்பல்லாத காலங்களிற் கொழுக்கட்டை கிடைத்துவிடுகிறது. 'பல்லுக்கொழுக்கட்டை அம்மா அவிப்பளே, பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே' இது ஆடிக்கொழுக்கட்டை, அம்மாவின் கொழுக்கட்டை இல்லம் ஏகும் வழியெல்லாம் இனிக்க இனிக்க மறவாமற் செல்வமாமி கொழுக்கட்டை தின்னத்தின்ன ஆசை யுடையது' மாமியின் கொழுக்கட்டை.

தாத்தாவுக்கு ஒரு கோழிச் சேவல், ஒரு முகட்டெலி, ஒருபூனை இவ்வளவும் போதும். தாத்தா ஒருசினிமாச் செய்து விடுவார். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' அல்லவா? இலவுகாத்த கிளிபோல இனி யாருங் காத்திருக்க வேண்டாம். நீங்கள் பெரிய அதிட்டசாலிகள். தாத்தா உங்களுக்கென்ற பிறந்தவர். எனினும் பெரியவர்களுக்கும் நல்ல உயர்ந்த நீதிகளைச் சொல்லுகிருர்....

'தோற்றிய திதியே' என்று ஒரு தொடர் சிவஞான போதத்திலே முதற் சூத்திரத்தில் வருகின்றது. 'திதி' என்ற வார்த்தைக்கு 'நிலை' என்று பொருள். தாமேதோன்றி நிலைப்பவைகள் அல்ல, ஒரு கருத்தாவால் தோற்றுவிக்கப் பட்டவைகள். 'உலகம் ஆதி பகவன் முதற்று'.

குயில்கள் கூவுகின்றன, மயில்கள் ஆடுகின்றன, மனிதன் பாடுகின்ருன்.

குயில்கள்களைக் கூவச்செய்தது எது! மயில்களை ஆடச் செய்தது எது! மனிதனுக்கு எப்படிப்பாட வருகின்றது! நிலையான பொருள்களென்று நாம் கட்டி அணைப்பவைகள் எல்லாம் கணந்தோறும் நிலை பெயர்ந்து விகாரம் அடைகின்றன. உலகம் தோன்றி நின்று அழியவும், தனக்கு ஒன்றுமின்றி, அந்த உலகமாயும் அதே சமயத்தில் வேருயும் விகாரமின்றி ஒருத்தி இருக்கின்ருள். அவள் இயற்கை அன்னை. அவள் புன்முறுவலில் உலகம் பூத்துக் காய்த்துக் கனிகின்றது. அவளின்றி அணுவும் அசையாது.

### பா அமுது வழங்கிய புலவர்

நாமகள் புகழையே நாவால் புகழ்ந்து
நாட்டினர் பாட்டுகள் நயமாய் புனைந்து
இலங்கை வளத்தையே இனிதாய் சுவைத்து
இயற்றிய பாடல்கள் இரசித்தார் வியந்து.

தங்கத் தாத்தாவாய் தமிழை வளர்த்தார்
தந்தை பிரிவால் தந்த கவிநூல்
சிந்தை தெளிந்த விந்தைப் பாட்டுகள்
கந்தன் அருளால் சொந்தம் ஆனதே.

— வ. யோகானந்தசிவம்.

# எகிப்தில் 6 தமிழ் இளைஞருக்கு மரண தண்டனை

கெய்ரோ, ஜூலை 6

போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டதாககுற்றம் சாட்டப்பட்ட ஆறு இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு எகிப்தியஉயர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. மேலும்14தமிழ் இளைஞர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட ஆறுதமிழ்இளைஞர்களும் தற்போது கெய்ரோ சிறைச்சாலையில் மரணதண்டனை பெற்ற ஏனைய கைதிகளுடன் சிறையில்இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தஇளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாகஎகிப்தியப்பொலிஸார் இலங்கைபோதைவஸ்து குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸ் அதிபர் திரு. டொனல்ட்மென்டிஸிக்கு அறிவித்துள்ளனர். எனினும்மேற்படி தண்டனை பெற்றதமிழ் இளைஞர்களின் பெயர்விபரங்கள் வெளியிடப்படவில்லை.

கடந்தஇரண்டுவருடங்களில் பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் 6 தமிழர்கள் உட்பட பதினொரு இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் மரணதண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [சி]

## பச்சைமட்டை அடித் தண்டனை

[முல்லைத்தீவு]

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் முல்லைத்தீவில் கரைத்துறைப்பற்று ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த நால்வருச்கு பச்சைமட்டை அடித் தண்டனை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாந் திகதி இத் தண்டனை வழங்கப்பட்டது. இராணுவ முகாமுக்கு எரிபொருள் வழங்கியமைக்காவும் முகாமுடன் தொடர்பு கொண்டிருந்தமைக் காகவுமே இத்தண்டணை அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கைப்பற்றப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவை வருமாறு:

ரி.56 ரக தன்னியக்கத் துப்பாக்கி-9, ரி.56 ரக கிறனேட் லோஞ்சர்-2, ஏ. கே. ரக ஃமஸ் எம். ஜி-2, றொக்கட்லோஞ்சர்-1, 62 எம். எம். மோட்டர்-2, மோட்டர் ஷெல்-10, ரம்மெகஸீன்-6, ஏ.கே ரகமெகஸீன்-50க்கு மேல், ரி. என். ரி., ஜே. ஆர்-கிறனேட் 50க்கு மேல், 7.62 நடுத்த ரவைகள் 1500க்கு மேல், அமர்கிறனேட்-2, கவச அங்கிகள்-3, கேஸ்கிறனேட்-4, ஆர். பி. ஜி. ஷெல்-2 (எ)

## பிரதேசசபை தேர்தல்: ஐ. தே. க. வேட்பாளர் சுட்டுக்கொலை!

[கொழும்பு]

ஹிக்கடுவ பகுதிப் பிரதேச சபைக்கு ஐ. தே. க. சார்பில் போட்டியிடுவதற்கு நியமனப் பத்திரம் தாக்கல்செய்த எம். மைக்கேல் என்பவர் காரொன்றில் சென்ற இனந்தெரியாத கோஷ்டியினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு இரத்கமை சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இவர் இரத்கமை எம். பி. திரு. அசோகா சோமரத்தினவின் அந்தரங்கச் செயலாளராக முன்னர் இருந்தவர்.

பொலிசார் இக்கொலைக்கான காரணம் பற்றிய விசாரணையிலீடுபட்டுள்ளனர். (மா)

## நோய்கள்வராமல் தடுக்க நடவடிக்கை

(மண்டைதீவு நிருபர்)

தீவுப்பகுதி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் இச்சங்கத்தின் தலைவரும், தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். சடாற்சர சண்முகதாஸ் தலைமையில் வேலணையில் நடைபெற்றது.

கால் நடைக்கான உணவுகளைப் பெறுதல், வழங்குதல் நோய்கள் பாவாமல் தடுத்தல் போன்ற விடயங்களை இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

தீவுப்பகுதியில் உள்ள கிராமங்கள் தோறும் மிருகவைத்தியர் சுற்றுலா மேற்கொள்வதற்கும், கோழி, மாடு, ஆடு போன்றவற்றின் நோய்களைக் கட்டுப்படுத்த நடவக்கை எடுப்பதென்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இப்பகுதி மூலவளமான பனை ஓலையிலிருந்து நெட்டியாகச் சேகரித்து வைக்கத்தக்க மாட்டு உணவைத் தயாரிப்பது பற்றிய செயல் முறைக்கருத்தை இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பனை அபிவிருத்திச்சபையின் [பணிப்பாளர்களில் ஒருவரான திரு. எஸ். பாலசிங்கம் தெரிவித்தார்.

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

அக்குபஞ்சர் ஊசி (35) டப்பியுடன் யாழ் நகரில் நேற்று (6-7-87) தவற விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும். Dr. தி. பூரணேஸ்வரன், 5, நாவலர் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (சி-9741)

மிது வீடியோ மூவிசாரின்
இன்றைய வெளியீடு
முரளி, சீதா, செந்தில் நடித்த
துளசி
[ஒரிஜினல் பிரதி]
எமது அடுத்த வெளியீடு!
மோகன் நடித்த
குங்குமக் கோடு
மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
[ஏ 145]

## குழிகாப்புத்தீன்; நிதி உதவி

வேலணை, திங்கள்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் கால்நடை வளர்ப்பாளர்களின் நன்மை கருதி ''குழிகாப்புத்தீன்'' தயாரிப்பதற்காகக் குழிகளை அமைப்பதற்கு மானிய அடிப்படையில்1800 ரூபாவை வழங்கமுன் வந்துள்ளது.

## இலங்கை விவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சோவியத் அதிகாரிகள் தெரிவித்துள்ள கருத்துகளும், மற்றும்சோவியத் பத்திரிகைஅறிக்கைகளும் இதனையே தெரிவிப்பதாகவும் மேற்குலக அரசியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### 'ஹிந்து' கருத்து

இதேவேளை சென்னை 'ஹிந்து' பத்திரிகை, கடந்த வாரம் ராஜீவ் மாஸ்கோவில் திரு. கோபச்சேவை சந்தித்த போது இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் பிரச்னைகள் பற்றியே முக்கியமாக ஆராய்ந்ததாக தெரிவித்துள்ளது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாமேற்கொண்டுள்ளகொள்கைகளையும், அவை வகுக்கப்பட்ட விதம்பற்றியும் திரு. கோபச்சேவ் திருப்தி தெரிவித்துள்ளதாகவும் ஹிந்து தெரிவித்துள்ளது.

'ஹிந்து' மேலும் தெரிவிக்கையில்: இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன, சோவியத்யூனியனுக்கான தனது விஜயத்தை ஒத்திபோடக் காரணமாயிருந்த சோவியத் அறிக்கைகளில் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டிருந்த ஏனைய செய்திகளையும் இலங்கைஅரசாங்கம் புரிந்திருக்கத் தவறியிருக்காதுஎனக் கூறியுள்ளது. (ஊ)

## நெல்லியடி

(1ம்பக்கத் தொடர்ச்சி)

இதைத் தொடர்ந்து மிகப் பலத்துடன் அமைக்கப்பட்டிருந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முகாம் எம்மால் தரைமட்டமாக்கப்பட்டது. தாக்குதல் இரவு 8 மணி தொடக்கம் சுமார் ஆறுமணித்தியாலங்கள் நீடித்தன.

மாடிக் கட்டிட இடிபாடுகளுக்குள் பெருந்தொகையான இராணுவத்தினர் சிக்கி உயிர் துறந்தனர்.

நேரடி மோதலில் பெருந்தொகையான படையினர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் ஒரு சிலர் தப்பியோடிவிட்டனர். தொடர்ந்து எமது புலிப்படையினரால் ஆயுதங்கள் மீட்கப்பட்டுவருகின்றன.

### கவசவாகனம் ஸ்கவுட் கார் சேதம்

நெல்லியடி முகாமில் படையினர் முற்றாக அழித்தொழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, படையினர் தமது பாவனைக்காக உபயோகித்துவந்த 'சலாடின் கவசவாகனம்', 'ஸ்கவுட் கார்', இராணுவ ட்ரக், மினிபஸ் என்பன எம்மால் சேதமாக்கப்பட்டு முற்றாக எரிக்கப்பட்டன. முகாம் கட்டிடமும் தொடர்ந்து எரிந்தவண்ணமுள்ளது.

இதேவேளை நெல்லியடி முகாம் மீது எமது படைப்பிரிவினர் தாக்குதல்களை மேற்கொண்டிருந்த சமயம் ஹெலிகாப்டர்ஒன்றும் தாக்குதல்களை நடத்திய வண்ணமிருந்தது.

மேலும் ஏனைய முகாம்களிலிருந்து உதவிக்கு விரைந்த படையினரும் எமது எதிர்த் தாக்குதல்களை அடுத்து பின் வாங்கிச் சென்றனர்.

தமிழ் ஈழ வரலாற்றில் முதல் தடவையாக இராணுவ முகாமொன்று பூரணமாகத் தகர்க்கப்பட்டு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டு படையினர் முகாமிட்டிருந்த அதே முகாமில் எமது வீரர்கள் முகாமிட்டிருப்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்'' (எ)

# 11 வயதுச் சிறுமி மீது பலாத்காரம்

யாழ்ப்பாணம், செவ்

ஆனைக்கோட்டையில் பதினொருவயதான சிறுமி ஒருவர் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினமிரவு 8 மணியளவில் இடம் பெற்றது.

இதுபற்றித் தெரிவிக்கப்படுவதாவது:

வசந்தி [11 வயது] என்ற பிரஸ்தாப சிறுமியை அவரது தாயார் பக்கத்துவீட்டில் விட்டபின்னர் கடைக்குப்பொருட்கள் வாங்கிவரச்சென்றார். அச்சிறுமி அவ்வீட்டுவாசலில் படுத்திருந்தார் அச்சமயம் சைவத்துரை என்றழைக்கப்படும் (45வயது) நபரொருவர் இச்சிறுமியின் அருகேவந்து அம்மாகடையால் வந்துவிட்டார் உன்னைவரச் சொல்லிவிட்டார் என அப்பிள்ளையை அழைத்துக்கொண்டு அப்பாலுள்ள தனது வீட்டிற்கு தூக்கிச்சென்றார்.

அங்கே சென்றதும் பிள்ளை சத்தம் போடாதவாறு வாய்க்குள் துணியைப் புகுத்திவிட்டு அச்சிறுமி மீது அவர் பலாத்காரம் புரிந்துள்ளார். இதனால் காயப்பட்ட அப்பிள்ளை கத்திக்கொண்டு வீட்டிற்கு ஓடிச்சென்றபோது தாயும் கடையால்வந்து கொண்டிருந்தார். தாயிடம்பிள்ளை நடந்த விபரத்தைக் கூறவே உடனடியாக பிள்ளையைஅத்தாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று அனுமதித்துள்ளார். (கு)

## காதலர்கள் தற்கொலை

[அச்சுவேலி நிருபர்]

காதல் கைகூடாததால்விரக்தியடைந்த ஒரு காதலனும் காதலியும் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்கள்.

சுன்னாகம் தெற்கில் வசிக்கும் சின்னையா கந்தசாமி [வயது 31] என்பவர் அவ்வூரைச் சேர்ந்த பெண்ணொருவரைக் காதலித்தார். இக் காதல் விவகாரத்தை இவரது உறவினர்கள் கண்டித்ததனால் விரக்தியடைந்த இவர், நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

காதலன் இறந்தசெய்தியைக்கேட்ட காதலி சின்னத்துரை சாந்தகுமாரி [வயது 17] தானும் நஞ்சருந்தி வாழ்வை முடித்துக்கொண்டார்.

வாழ்வில் இணையமுடியாத இருவரின் மரண ஊர்வலங்கள் ஒன்றாக நடைபெற்று இணுவில் பூவோடை மயானத்தில் இறுதிக்கிரியைகள் இடம் பெற்றன. (ஒ)

## டிசம்பர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராம்.

அப்போது இராணுவத்தினர் தாம் டிசம்பர் மாதம் வரை இங்கு இருப்போம்என்றும் வீடுகளில் வந்திருந்தால் வேண்டிய உதவிகளை அளிப்பதாகவும் கூறினராம்'

வீடு திரும்பும்போது அப்பெண்மணிக்கு அரிசி, மா போன்ற உணவுப் பொருட்களையும் இராணுவத்தினர் வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

## வீட்டை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அரசினர் வைத்தியசாலையில் மரண விசாரணையை மேற்கொண்டார்.

இறந்தவரின் மனைவி சாட்சியத்தில் கூறியதாவது:

இராணுவத்தினர் மாவிட்டபுரம்பகுதிக்கு வந்ததையடுத்து அங்கிருந்து நாம் வெளியேறினோம். இறப்பதற்குமுதல் நாள் இறந்தவர் தனது வீட்டைப் பார்த்துவிட்டு வருவதாக கூறிச்சென்றார்.

பின்னர் திரும்பி வந்து வீடு இடிந்த நிலையில் இருப்பதாகவும், பொருட்கள் எதுவும் இல்லை எனக்கூறி கவலையுடன் இருந்தார்.

சம்பவதினத்தன்று மாலை தோட்டத்துக்குச்சென்று வருவதாக கூறிவிட்டுச் சென்றவர் சிறிது நேரத்தில் மருந்து குடித்துவிட்டார் என சத்தம் இட்டதை அடுத்து நானும் குழறிக்கொண்டு சென்று அயலவர் உதவியுடன் வைத்தியசாலைக்கு அவரை எடுத்து வந்தோம்'' என்றார்.

மரண விசாரணை அதிகாரி தனது தீர்ப்பில் கிருமிநாசினி அருந்தி தற்கொலைசெய்து கொண்டார் என தீர்ப்பு வழங்கினார்.

## வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லலித் வடமராட்சியை இராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ள சிவில் நிர்வாகத்தையும் இப்பகுதியில்நடைமுறைப்படுத்த ஆயத்தங்கள் இடம் பெற்றுவருகின்றது.

ஆயினும் வடமராட்சியில் தமிழ்போராளிகளின்அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நெல்லியடி முகாம்தாக்குதல் வடமராட்சியில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் தாமதத்தை உண்டுபண்ணியுள்ளது'' என்றார்.

## இராணுவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

வடமராட்சியில் இடம் பெற்ற இராணுவநடவடிக்கையையடுத்து தற்போது இராணுவத்தினர் மீண்டும் அப்பகுதியில் தேடுதல்வேட்டையில் இறங்கி பொதுமக்களை பலவாறும் துன்புறுத்திவருவதாகவும் மக்கள் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர்.

இப்பகுதிக்கு சென்ற இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் வீடுகளைவிட்டு கையில் கிடைத்த பொருள்களுடன் சின்னஞ்சிறுசுகளுடன் வெளியேறி வந்துகொண்டிருப்பதையும், ஆலயங்கள், பாடசாலைகளில் கஷ்டநிலையில் தங்கியிருப்பதையும்நேரில்பார்த்தனர்.

இவர்களின் துயரச் சம்பவங்களை கேட்ட திரு. சௌத்திரி ''நிச்சயமாக உங்களுக்கு எதிர்காலத்தில் நல்வாழ்வுகிட்டும்; நீங்கள் கூறியவற்றையும் நாம் நேரில் பார்த்தவற்றையும் உரிய இடத்தில் எடுத்துக்கூறி உரிய நேரத்தில் ஆவனசெய்ய நடவடிக்கை எடுப்பேன்'' என்று கூறினர். (சி)

## இராணுவ நடவடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுக் கைப்பற்றப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

நெல்லியடி இராணுவ முகாம் தாக்குதல் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பகுதியிலுள்ள 6 சிறிய இராணுவ முகாம்களுக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், பெரும்பாலும் இராணுவ நடமாட்டம் இனிமேல் இப்பகுதியில் பெருமளவு கட்டுப்படுத்தப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள வடமராட்சியை விடுதலைப் புலிகள் மீண்டும் தமதுகட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் நேற்று பி. பி. சி. தெரிவித்தது. (சி)

வலி வடக்கில்

# 10 கிறிஸ்தவ ஆலயங்களில் பூஜை, ஆராதனைகள் இல்லை

## நான்கு சேதமடைந்துள்ளன

(மாவிட்டபுரம் நிருபர்)

வலி வடக்குப் பகுதியில் 10 கிறிஸ்தவ தேவாலயங்கள் பூசை ஆராதனை இன்றிப் பூட்டிக் கிடப்பதுடன் 4 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வலி. வடக்குப் பகு யைச் சேர்ந்த ஊறணி புனித. அந்தோனியார் ஆலயம், காங்கேசன்துறை நல்யாத்திரை மாதா ஆலயம், காங்கேசன்துறை சூசையப்பர் ஆலயம், வீமன்காமம் யுவானியார் ஆலயம், தெல்லிப்பழை சம்பேதுறுவானவர் ஆலயம், தெல்லிப்பழை வேளாங்கண்ணி ஆலயம், வலித்தூண்டல் அன்னம்மாள் ஆலயம், முலவை செபமாலை மாதா ஆலயம், தென்னிந்திய திருச்சபையின் காங்கேசன்துறை, தெல்லிப்பழை தேவாலயங்கள் ஆகியன கடந்த மாதம் 7-ம் திகதிக்குப்பின பூட்டப்பட்டு பூசைகள் எதுவுமின்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதில் 4 ஆலயங்கள் இராணுவநடவடிக்கைகளின்போது சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்துக் கிறிஸ்தவ மக்களால் பெரிதும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

யாழ் நகரில்

# சட்டவிரோத மின்சாரத்தை தடுப்பதற்கு நடவடிக்கை!

(மண்டைதீவு நிருபர்)

சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெறுபவர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் யாழ். நகரின் பல பகுதிகளிலும் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

யாழ் மாநகர மின்சாரப் குதியின் இத் திடீர் நடவடிக்கைகளினுல் நகரின் பல குதி ளில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இவர்கள் பாவித்த மின் கம்பிகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் உள்ள ஒழுங்கையொன்றில் நேற்று முன்தினம் நடந்த திடீர் சோதனையில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற பலர் சிக்கிக்கொண்டதாகத் தெரியவந்துள்ளது.

மாவிட்டபுரம் வீமன்காமத்தில்

# வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்கள் இராணுவ தடையினுல் திரும்பினர்!

மாவிட்டபுரம், திங்கள்

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்ல இராணுவம் அனுமதிவழங்கவில்லை. அதே சமயம் அப்பகுதியில் 'ஷெல்' தாக்குதல் இடம் பெற்றதால் மக்கள் பீதியுடன் திரும்பினர்

இராணுவம் நிலைகொண்டுள்ள மேற்படி பகுதிகளில் தமது வீடுகளைப் பார்வையிட்டு அத்தியாவசிய பொருள்களை எடுப்பதற்காக தினமும் அங்கு மக்கள் படையெடுத்து வருகின்றனர்.

நேற்றும் ஏராளமானபொது மக்கள் அங்கு சென்றனர். ஆனுல் அவர்கள் வீடுகளுக்குச் செல்ல இராணுவம் அனுமதி அளிக்கவில்லை. இதனுல் அவர்கள் திரும்பிவந்தனர்.

இதேசமயம் மாவிட்டபுரம் பகுதியில் பல தடவைகள் 'ஷெல்' தாக்குதலும் இடம் பெற்றது.

இந்திய நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு லொறிகள்காங்கேசன்துறையிலிருந்து வந்துகொண்டிருந்தன.

வீடு பார்க்கச் சென்றவர்கள் பலமணி நேரம் காத்திருந்து விட்டுத் திரும்பினர்.

இதற்கிடையில் பலாலியிலிருந்து காங்கேசன்துறைக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்காக இராணுவத்தினர் இன்று வந்ததாகவும் கூறப்படுகிறது.

## பிரதான வீதி திருத்தப்படும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு-மாதகல் பிரதான வீதி விரைவில் நெடுஞ்சாலைத் திணைக்களத்தினுல் திருத்தப்படவுள்ளது.

பண்டத்தரிப்பு சந்தியில் நீண்டகாலமாகச் சேதமடைந்து மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று போக்குவரத்து மிகவும் கஷ்டமான நிலையில் இருந்து வந்த வீதியும் உயர்த்தப்பட்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ளது இதற்கான கற்கள் ஏற்கனவே கொண்டுவரப்பட்டுள்ளன.

## மரணம்

பலாலி, திங்கள்

வேகமாகச் சென்ற மினிபஸ்க்கு இடம்விட்டுக்கொடுப்பதற்காக மோட்டார் சைக்கிளைத் திருப்பியபோது அருகிலிருந்த மின்கம்பத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதால் ஒட்டி தலைசிதறி மரணமானுர்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த மினிபஸ் சாரதி எஸ். சோதி (வயது 35) என்பவரே மரணமானவர், இவ்விபத்து வடலியடைப்பில் இடம்பெற்றது.

இராணுவ நடவடிக்கையால்

# வலி வடக்கு தபால்சேவை முற்றுக சீர்குலைந்தது!

(மாவிட்டபுரம் நிருபர்)

வலி வடக்குப் பகுதியில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் தபால் பகுதியினரின் சேவைகள் யாவும் சீர்குலைந்துள்ளன.

காங்கேசன்துறை தபால் நிலையம் சுன்னுகத்திற்கும், தெல்லிப்பழை தபால் நிலையம் துர்க்காதேவி ஆலயத்திற்கு சமீபத்திலும் தற்காலிகமாக இயங்கிவருகின்றன. ஆனுலும் அவை முன்புபோல் முழுமையாக சேவையாற்ற முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட ஊறணி, தையிட்டி, கீரிமலை, மாவிட்டபுரம், குரும்பசிட்டி, கட்டுவன் ஆகிய உபதாபல் நிலையங்கள் செயல்படமுடியாமல் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மக்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருப்பதால் தபால்களை விநியோகம் செய்ய முடியாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் மக்கள் தமக்கு வரும் தபால்களைப் பெற தபால் நிலையங்களைத் தேடித்திரிகிறுர்கள்.

ஆஸ்பத்திரியிலிருந்து

# இளைஞரின் சடலத்தை கடத்தி சென்றனர்

(பலாலி நிருபர்)

நஞ்சுக்குப் பலியானவரின் சடலத்தை உறவினர்கள் ஆஸ்பத்திரியிலிருந்து கடத்திச் சென்றனர்.

இச்சம்பவம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்றது.

சுன்னுகம் மயிலணியைச் சேர்ந்த செல்லையா ஜெயச்சந்திரன் (வயது 18) நஞ்சருந்திய நிலையில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானுர்.

விசாரணையின் பின்புதான் சடலத்தை ஒப்படைக்கலாம் என டாக்டர் தெரிவித்திருந்தார்.

கடமையிலிருந்த ஊழியர்கள் தடுக்கவும் உறவினர்கள் சடலத்தை எடுத்துச் சென்றனர்.

# இன்றைய பலன்

திகதி: (23) 7-7-87

மாதம்: ஆனி

கிழமை: செவ்வாய்

நக்ஷத்திரம்; விசாகம்

திதி; ஏகாதசி

மேடம்: கடமையிலும் கண்ணியம் பிறக்கும். களஸ்திர வழியாலும் வரவுண்டு. பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

இடபம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும் வாகனச் சாரதிகள அவதானம் வேண்டும். பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

மிதுனம்: எதிலும் புதுமையைக் காணுவீர்கள். பிறர் ஆதரவுமுண்டு. யாத்திரைப் பிரியமும் உண்டாம்.

கடகம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்களைச் சோபிதமடையச்செய்யும். சுற்றுடலிலும் மதிப்புயரும். தொழிலிலும் தொல்லைகள் பிறக்கும்.

சிங்கம் மனம்போல் வாழ்வு இன்று மலரும் உத்தியோக உயர்வுமுண்டாம். தொழில் விருத்தியுண்டாம் சுபநாள்.

கன்னி: வீணுன பகைகள் தோன்றும் வியாபார மோசடியுண்டு வைத்திய செலவுமுண்டாகும்.

துலாம்: எதையும் அலட்சியப்படுத்துவீர்கள். எதிலும் குறைகேட்க நேரிடும். பெண்கள் விடயத்தில் அவதானமாயிருக்கவும்.

விருச்சிகம்: ஆசிரியர்களுக்குப் பொன்னுள். காதலர்களுக்கு கனிவான நாள். குடும்ப மேன்பாடுமுண்டாம்.

தனுசு: முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை தோன்றும். ஆமை வேகத்தில் காரியங்கள்நடைபெறும். புதிய முதலீட்டைத் தவிர்க்கவும்.

மகரம்: இரக்க சிந்தை மேலிடும். வெளியிடத்துத் தொடர்புபெருகும். தொழில் நலனுமுண்டாம்.

கும்பம்: பொருளாதார நிலை விருத்தியடையும். குடும்பத்திலும் தென்றல் வீசும், வரவிலும் திருப்தியுண்டு.

மீனம்: துன்பத்தின் நிழலாட்டம் தொடரும். பிரயாணத்தின்போது அவதானம் வேண்டும். தொழில் சீர்கெடலாம்.

திருமலை

வே. ரவீந்திரன்

## பனம் பொருள் கிடைக்க நடவடிக்கை

(மண்டைதீவு)

சத்துணவுத் திட்டத்தின்கீழ் பனை அபிவிருத்திச் சபையினுல் உற்பத்தி செய்யப்படும் பனம் உணவுப்பொருள்களைத் தீவுப் பகுதி மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

தீவுப்பகுதியிலுள்ளவேலணை ஹார்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகஇந்தஉணவுப்பொருள்களை விற்பனை செய்யப் பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஊறணியைச் சேர்ந்த

# 77 குடும்பங்கள் உடமைகளை இழந்தன!

(மாவிட்டபரம் நிருபர்)

திடீர் ஊரடங்கு உத்தரவால் வீமன்காமம் யுவானியார் தேவாலயத்திலிருந்து வெளியேறிய ஊறணிக் கிராமத்தைச் சேர்ந்த 77 குடும்பங்கள் திரும்பவும் அங்கு சென்ற சமயம் அங்கிருந்த தமது உடைமைகள்எவையும்காணப்படவில்லையெனப் பெரிதும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஊறணிக் கிராமத்தில் ஏற்பட்ட பதற்றநிலையால் ஏற்கனவே அங்கிருந்து வெளியேறி மேற்படி ஆலயத்தில் தங்கியிருந்த 77 குடும்பங்கள் தற்போது தமது உடைமைகளை இழந்த நிலையில் பெரிதும் கஷ்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

நிறை குறைந்த, தரம் குறைவான——

# பாண் உற்பத்தி செய்யும் பேக்கரிகளுக்கு எச்சரிக்கை

கொழும்புத்துறை, திங்

நிறைகுறைந்த, தரக்குறைவான பாண் உற்பத்தி செய்வதும், விற்பனை செய்வதும் குற்றச்செயல் என்றும், நிறை குறைந்த தரக்குறைவான பாணை உற்பத்தி செய்யும் பாண் பேக்கரி உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ்: மாவட்ட உள்நாட்டு வியாபாரத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்தவிடயத்தில் சமூக ஸ்தாபனங்களும், பொது நிறுவனங்களும் கவனம் செலுத்திச் சேவை மனப்பான்மையுடன் பாவனையாளர்களுக்கு உதவ முன்வரவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நிறைகுறைவான, தரக்குறைவான பாண் உற்பத்தியிலீடுபடும் பாண் பேக்கரிகளுக்கான மா விநியோகம் நிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்துக்கு இடைஞ்சல்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மத்திய சந்தைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் மண்ணெண்ணெய், பெற்ரோல் போன்ற எரிபொருள்களை விற்பனை செய்பவர்கள் தற்காலிக கொட்டகைகளை அமைத்து கடைக்கட்டிடங்களுக்கு முன்பாக வைத்து விற்பனை செய்துவருகின்றுர்கள். இதனுல் இப்பிரதான வீதியில் போக்குவரத்திற்கு பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

## தபால் அத்தியட்சகர்

மண்டைதீவு, திங்கள்

முல்லைத்தீவு மாவட்டத் தபால் அத்தியட்சகராக கடமையாற்றிவந்த திரு. எஸ். எம். சேதுகாவலர் யாழ். மாவட்டத் தபால் அத்தியட்சகராக இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

# "உள்ளூர் உணவை உபயோகிப்பதால் எமது தேவைகளைப் பூர்த்திசெய்யலாம்"

மாவிட்டபுரம், திங்கள்

"எமது உள்ளூர் உற்பத்தியான மரவள்ளிக் கிழங்கிலிருந்து 35 வீதமான உணவு வகைகளை தயாரிக்க முடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது நெருக்கடியான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இன்னமும் மேலை நாட்டு உணவு வகைகளில் நாட்டம் கொள்ளாது சுதேசிய உணவுப் பொருள்களை உபயோகித்து எமது சொந்தக் காலிலேயே நிற்கும் நிலையை உருவாக்க வேண்டும்."

இவ்வாறு இணுவில் கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கத்தில் நடத்தப்பட்ட உள்ளூர் உணவுப் பொருள்கள் பற்றிய கருத்தரங்கிலும் செய்முறைப் பயிற்சியிலும் கலந்து கொண்டு உரையாற்றிய இணுவில் பிரஜைகள் குழு செயலாளரும், கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளருமான திரு. சி. சண்முகலிங்கம் கூறினார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ. இலகுநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசியதாவது: "மரவள்ளிக் கிழங்கிலிருந்து 20 வகையான உணவுகளும் மரவள்ளி மாவிலிருந்து 15 வகையான உணவுகளும் தயாரிக்க முடியும் என இன்று நடந்த பயிற்சிகளிலிருந்து தெரியவருகிறது இதில் 20 உணவு வகைகள் நீண்ட நாளைக்குப் பழுதடையாமல் இருக்குமெனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றை கூடியளவு காலை, மாலை உணவாக நாம் பயன்படுத்தலாம். உள்ளூர் உணவை உபயோகிப்பதன் மூலம் எமது தேவையை நாமே பூர்த்தி செய்யும் நிலையும் ஏற்படும்.

யாழ்.கிருஷிக பகுதி மனையியல் ஆசிரியை திருமதி. சரோஜினிதேவி சண்முகநாதன செய்முறைப்பயிற்சிகளை அளித்தார்.

மற்றும் இணுவில் சமாதான சபை செயலாளர் திரு. தி. புரந்தரதாசன், திருமதி ப.சிவரத்தினம், திருமதி ப. ஆனந்தம் உட்பட பலர் கருத்துரை வழங்கினர்.

## பதவி உயர்வு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் இ. செல்வநாயகம் பதிவுபெற்ற வைத்திய உத்தியோகத்தர் சேவையின் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வுபெற்றுள்ளார்.

## தற்கொலை

(பலாலி)

சுன்னுகத்தை சேர்ந்த சி. கந்தசாமி (வயது 30] என்ற நபர் நக்சுத்கிராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

இவரது மரணவிசாரணை தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது.

## பிரதிஷ்டை

பண்டத்தரிப்பு, திங்கள்

வடலியடைப்பு புதருணை ஸ்ரீசித்தி விநாயகர்ஆலயத்தில் புதிய பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா வைபவம் கடந்த 3ம் திகதி வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது. சிவஸ்ரீ ச சுப்பிரமணியக்குருக்கள் பிரதிஷ்டா குருவாக இருந்து இதனை நிறைவேற்றி வைத்தார்.

## நயினதீவில் தபால் பைகள் பலத்தசோதனை

(புங்குடுதீவு நிருபர்)

கடந்த சில வாரங்களுக்கு பின் மீண்டும் நயினதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினரால் தபாற்பொதிகள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு தபால் பைகள் படையினரால் வெட்டப்பட்டுவருகிறது.

நேற்று முன்தினம் நெடுந்தீவு தபாற்கந்தோரிலிருந்து புங்குடுதீவு தபாற் கந்தோருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த தபால் பொதிகள் நயினதீவிலுள்ள படையினரால் வெட்டப்பட்டு தபாற்பையினுள் இருந்த கடிதங்கள் அனைத்தையும் நன்கு பார்வையிட்ட பின்னர்,வெட்டப்பட்ட நிலையில் அனுதரவான நிலையில் ஊழியர்களிடம் ஒப்படைக்கபட்டதாக தெரிய வருகிறது.

இது குறித்து அவ்வூர் மக்கள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

## தெல்லிப்பளையில் 125 குடும்பங்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள்

(மாவிட்டபுரம் நிருபர்)

உலகில் உள்ள செல்வந்த நாடுகள் யாவும் பாராமுகமாக இருந்தவேளையில் அல்லல்படும் தமிழ்மக்களுக்கு உதவ பாரதம் முன்வந்தமை அந்நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும், பரோபகார சிந்தையையும் எடுத்துக்காட்டுகிறது. இந்த இந்தியநிவாரண உதவிகளுக்குப் பக்கபலமாக இருந்த சகலருக்கும் ஈழத்தமிழர்கள் என்றும் கடமைப்பட்டவர்கள்."

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இடம்பெற்ற அகதிகளுக்கான இந்திய உணவுப்பொருள்கள் வழங்கும் வைபவத்தில் கலந்துரையாற்றிய வலி. வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியத் தலைவர் சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம் கூறினர்.

இவ்வைபவத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. வேணுகோபால் மற்றும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், வலி. வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியச் செயலாளர் திரு எஸ். சிவமகாராசா, வலி. வடக்கு உதவி அரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் உட்படப்பலர் கலந்து கொண்டனர்.

துர்க்காதேவி ஆலயத்தில் தங்கியுள்ள 125 அகதிக் குடும்பங்களுக்கு நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட்டன துர்க்காதேவி ஆலய நிர்வாகசபைச் செயலாளர் திரு கே. தணிகாசலம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

## இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்து—— தீவுப்பகுதியில் மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(வேலணை நிருபர்)

தமிழ் மாணவர்கள் மீதும், பாடசாலைக் கட்டிடங்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களையும் மாணவர்களைக் கைது செய்து வருவதையும் கண்டிக்கும் முகமாக கடந்த வெள்ளிக்கிழமை தீவுப் பகுதியில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றினை மாணவர்கள் நடத்தினர்கள். இவ்வூர்வலம் புங்குடுதீவு, மண்டைதீவு, ஊர்காவற்றுறை, புளியங்கூடல்,வேலணை ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பமாகி வேலணை வங்களாவடி முருகன் ஆலய திறந்த வெளியரங்கைச் சென்றடைந்து அங்கு பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது.

மாணவர்களால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் இந்திய அரசே காப்பாற்று, தமிழ் மாணவர்களின் கல்வியில் தரப்படுத்தல், பாடசாலைகளை இராணுவ முகாம் ஆக்குவதா? அதிபரின் உத்தரவின்றி பாடசாலை மாணவர்களைக் கைது செய்யாதே! கைது செய்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் உடனே விடுதலை செய்!என்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் சென்றனர். மாணவர்களது ஊர்வலங்களால் தீவுப் பகுதியில் வாகனப் போக்குவரத்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

வர்த்தக நிலையங்கள் தொழிற்சங்கங்கள்என்பனவும் மூடப்பட்டு தீவுப் பகுதி எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

## "மக்களைத் துன்புறுத்துவது எமது 'நோக்கமல்ல"

வவனியா, திங்கள்

"பொதுமக்கள் எமது எதிரிகளல்ல ஆயுதம் ஏந்தி எங்களை எதிர்த்து போராடுபவர்கள் தான் எமது எதிரிகள்" என்று வன்னி மாவட்ட பாதுகாப்பு படைகளின் பிரதம இணைப்பதிகாரி பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்தார்.


கிராம சேவையாளர்களுக்கான கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

திரு. கொப்பேகடுவ மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: பொதுமக்கள் மத்தியில் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் போராடுவதினல் பொதுமக்களை விடுவிப்பதற்காக நாமும் போராடவேண்டியுள்ளது.

அரசு அரசியல் பிரச்னைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுத்தாலும் இராணுவ நடவடிக்கைமூலம் பயங்கரவாதத்தினை ஒழித்துக்கட்டுவது பாதுகாப்பு படையினரது கடமையாகும்.

வன்னிப்பிரதேசத்தில் பயங்கரவாதத்தினை ஒழித்துக்கட்டும்படி அரசு எமக்கு பணித்துள்ளது. சாதாரண பொதுமக்களை துன்புறுத்துவது எமது நோக்கமல்ல. எமது நடவடிக்கைகள் மக்களுக்கு இடையூருக இல்லா வண்ணமே நடைபெற முயல்கிறோம். (ஒ)


STUDY ABROAD




U.K./U.S.A./ W. Germany/ Singapore/ Malaysia Japan

Cyprus [Cheapest & all Colleges affiliated to U.K./U.S.A. recognised Universities/ Institutes].

* Engineering, Business studies, Computer, Law, Accountancy, Eelctronics, Hotel Management, Architectural, Marketing, Secretarial, Quantity surveying, Languages, Professional exams, Modelling, Hair dressing, BA, BBA, MBA, BSC, Diplomas etc.
* Accommodation/Meals Provided by Colleges.
* Advice given on vacation jobs too.
* Excellent references available from Students/Parents.
* Full course fees from Rs. 10,000/- & above.
* Currency Permits/Visas will be arranged & FREE ADVICE given.

Consult: Preethiraj Weeraratne,
MBA (LOND), FABE, FCIM, FAAI, FISTM, MBIM, Dip, Accy (Lond).

**Weeraratne & Co**
65, Jawatta Road, Colombo 7.
Tele: 500736, (24 hrs. Answer Service).
Kandy: No 3, Wattarantenna Road, Kandy.
(Official Representatives affiliated to many Colleges/ Universities/ Insututites abroad)

dave 1721

எமது இன்றைய
புதிய வெளியீடுகள்

1. ★ முரளி ★ சீதா ★ கார்த்திக் ★ செந்தில்
'துளசி' (SHANTH)

2. ★ சிவாஜி ★ பண்டரிபாய் ★ தங்கவேலு
'அந்த நாள்' (SHANTH)

3. ★ ஜெய்சங்கர் ★ K R விஜயா ★ நாகேஸ்
'பட்டணத்தில் பூதம்' (SHANTH)

4. ★ விஜயகாந் ★ விஜயகுமார் ★ அர்ச்சுன
'ஏமாருதே ஏமாற்றுதே' (SHANTH)

எமது அடுத்த வெளியீடுகள்:
★ 'குங்குமக் கோடு'
★ 'சூரிய காந்தி'

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665. (எ-144)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 7-7-87

# சீன இராணுவ உதவி இலங்கையிடம் இந்தியா விளக்கம் கோரியுள்ளது!

புதுடில்லி, ஜூலை 6

தமிழ் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசு சீனுவிடம் இராணுவ உதவிகளை நாடியிருப்பதாக வெளிவந்த செய்திகள் குறித்து இந்தியா இலங்கையிடம்விளக்கம் கேட்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

சீன இராணுவ உதவிகளை இலங்கை பெற்றுக்கொள்வமூலம் மோசமடைந்த இந்து சமுத்திர பதற்றநிலை மேலும் மேலும் அதிகரிக்கும் என்றும் இந்து சமுத்திரத்தில் வல்லரசுகளின் தலையீட்டுக்கு இதுவழி வகுக்கும் என்றும் இந்தியாகருதுவதாலேயே இலங்கையிடம் இந்தியா மேற்படி விளக்கத்தைக் கோரியுள்ளதாகவும்தெரிகிறது. இதேவேளையில்இந்திய பாதுகாப்புப்படைகளை உஷார் நிலையில்வைக்குமாறு உயர் பீடத்திலிருந்து உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தென் மாநிலங்களிலுள்ளதளங்களில் துருப்புக்களினதும் இராணுவத் தளபாடங்களினதும் எண்ணிக்கை அதிகரிக்கப்பங்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

## இலங்கை நிலைமை காமகோடி பீட சுவாமிகள் கவலை

[சென்னை]

"இலங்கையில் நிலவும் மத வெறியும், தமிழர்களை திட்டமிட்டபடி படுகொலை செய்வதுமே இலங்கையின் இன்றைய கொந்தளிப்புக்கு முக்கிய காரணமென்று காஞ்சி காமகோடிபீடம் ஜெயேந்திர சுவாமிகள் கவலை தெரிவித்துள்ளார்.

திருத்தணியில் செய்தியாளர்களுக்களித்த பேட்டியொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் போராளிகள் ஆலயங்களில் தஞ்சம்புகுந்திருப்பதால் தாங்கள் இந்து ஆலயங்கள் மீது தாக்கவேண்டியுள்ளது என இராணுவத்தினர் கூறினுலும்கூட அது கண்டனத்திற்குரிய செயலாகுமென்றும் தெரிவித்துள்ளார். [சி]

## பாராளுமன்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாதமும் ஜனுதிபதி நீடிப்புப் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிடவேண்டும்.

இலங்கையில் 83-ம் ஆண்டு மே மாதம் முதல் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்து வருவது தெரிந்ததே. [ஊ]

## உள்ளூராட்சி தேர்தல்கள் முஸ்லிம்களை பகிஷ்கரிக்குமாறு புலிகள் வேண்டுகோள்

[மட்டக்களப்பு]

உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழர்களைப்போல் முஸ்லிம்களும் போட்டியிடக்கூடாதெனத் தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழ் மக்களைப்போல கிழக்குப் பிரதேசத்தில் முஸ்லிம்களும் உள்ளூராட்சித் தேர்தல்களிலிருந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும் எனக்கோரும் துண்டுப் பிரசுரங்களை 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பு வெளியிட்டுள்ளது.

கிழக்குப் பிரதேசத்தில் முஸ்லிம் பகுதிகளிலுள்ள பிரதேச சபைகளுக்கு நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தமிழர்கள் எவரும் முன்வராதபோதிலும் முஸ்லிம்கள் இடம்பெற்றது குறிப்பிட த்தக்கது.

'தமிழ் மக்கள் இன்னல்படும் இவ்வேளையில் முஸ்லிம்கள் போட்டியிடுவது நியாயமா? தமிழ் மக்களைப்போல் முஸ்லிம்களும் தேர்தல்களிலிருந்து ஒதுங்கவேண்டும். முஸ்லிம்களுடன் சமாதான உடன்பாட்டுக்கு நாம் வரத் தயாராக உள்ளோம்' என்று அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இஸ்லாமிய அணிகளின் வேட்பாளர்களைச் சந்தித்துக் கோரிக்கை விடுவதற்கான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் தீவிரமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். (மா)

## மாவையில் வெற்றிலை செய்கை நாசம்

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரம் பகுதியில் வெற்றிலைக் கொழுந்துகள் அழிக்கப்படுவதுடன் நீரிறைப்பும் தகுந்த பராமரிப்புமின்றி அவை கருகிவருகின்றன.

கடந்த மாதம் 7ம் திகதி திடீர் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை தமது வெற்றிலைத் தோட்டங்களைச் சென்று பார்வையிட்டு நீர்ப் பாய்ச்சவோ வெற்றிலைக் கொழுந்துகளைச் சரிபார்க்கவோ முடியாத நிலையில் மிகவும் மனக்கவலையுடன் இப்பகுதி வெற்றிலை உற்பத்தியாளர்கள் காணப்படுகிறுர்கள்.

வெற்றிலைக் கொழுந்துகளை நாட்டி இரு வருடங்களுக்கு அவற்றைச் சரியானமுறையில் பராமரித்து வளர்ப்பதன் மூலமே உரிய பலன் கிடைக்கும். சரியான முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட வெற்றிலைக் கொழுந்துகள் 20 வருடங்கள்வரை நின்று பலன் தரச்கூடியவை.

மாவிட்டபுரம் சுற்றுடலில் இராணுவத்தினர் வெளியாக்கிய பிரதேசத்தினுள் சுமார்50 ஆயிரம் வெற்றிலைக்கொழுந்துகள்வரை வெட்டி அழிக்கப்பட்டுள்ளதாகவும், இதனுல் பல ஆயிரம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் அங்கு வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டு வந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதைவிடமேலும் 2 லட்சத்துக்கு மேற்பட்ட கொழுந்துகள் அப்பகுதியில் கருகி அழிந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பாகிஸ்தான் இனிங்ஸ் வெற்றி

[லண்டன்]

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 3வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான்அணி இனிங்ஸாலும் 18 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 136 ஓட்டங்களை பெற்றது. பாகிஸ்தான் அணி 353 ஓட்டங்களை பெற்றது. இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 217 ஓட்டங்களைப் பெற வேண்டிய இங்கிலாந்து அணி 2வது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டி மூலம் பாகிஸ்தான் அணித்தலைவர் இம்ரான் கான் 300 விக்கெட்டுகளை கைப்பற்றி உலகில் 300 விக்கெட்டுகளைப் பெற்ற 8வது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். (சி)

## பலாலி முகாமில் சித்திரவதை: விடுதலையானவர் தகவல்

[பண்டத்தரிப்பு நிருபர்]

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களும், யுவதிகளும் பல கொடுமையான சித்திரவதைக்குள்ளாககப்பட்டு வருவதாக அண்மையில் அங்கிருந்து விடுதலையான இளைஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடமராட்சிப் பகுதியில் கைதான பல இளைஞர்கள், யுவதிகள் உட்பட இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள பலரும் இவ்வாருன பலவிதமான சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு வருகிறுர்கள்.

இதுபற்றி அவ்இளைஞர் மேலும் தெரிவிக்கையில்: தாம் இம்முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நாட்களில் இரவு நேரங்களில் யுவதிகளின் அழுகுரல்களை அடிக்கடி கேட்டதாகவும் கூறினுர்.

இவ்வாறு அசிங்கமான பல சித்திரவதைகளை அவர்கள் அனுபவித்து வருவதாகவும் இராணுவத்தினர் மிகவும் கொடூரமான முறையில் இவர்களுடன் நடந்துகொள்வதாகவும் இவ்இளைஞர் கவலையும் வேதனையும் கலந்தகுரலில் தெரிவித்துள்ளார். [சி]

## மாணவர் வரவு குறைவு

பலாலி, திங்கள்.

இராணுவ நடவடிக்கையை அடுத்து நீண்டகால இடைவெளிக்கு பின் தெல்லிப்பழை பகுதி பாடசாலைகள் இயங்க ஆரம்பித்துள்ள போதிலும் மாணவர் வரவு மிக் குறைவாகவே உள்ளது.

தெல்லிப்பழை பகுதியில் உள்ள மகாஜனு, யூனியன் ஆகிய இரு பிரபல கல்லூரிகள் உட்பட சகல பாடசாலைகளும் இயங்குகின்றன.

இப்பகுதிமக்கள்அகதிகளாக வெளியேறியதை அடுத்தே மாணவர் வரவில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அத்துடன்இப்பகுதி பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்ருேர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

## சீமெந்து இன்மையால் பாதிக்கப்பட்ட நாளாந்த தொழிலாளர் அமைப்பு

யாழ்ப்பாணம், செவ்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயங்காத காரணத்தால் சீமெந்தை மூலப் பொருளாகக் கொண்டு தொழில் நடத்திவந்த மேசன், மேசன்கூலி, தச்சு, தச்சுக்கூலி, வருணம்தீட்டுவோர், கட்டிடமின் இணைப்புத் தொழிலாளர் ஆகியோர் இணைந்து "பாதிக்கப்பட்ட நாளந்த தொழிலாளர் அமைப்பு" ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

பங்குத்தந்தை ஆர். யோசப் அடிகளாரின் தலைமையில் றக்காவீதி புனித திரேசம்மா ஆலய மைதானத்தில் இவ் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இவ்வமைப்பு யாழ் அரசாங்க அதிபர் உட்பட ஏனைய அரசு சார்பற்ற நிறுவனங்களை சந்தித்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் கோருவதென்றும் யாழ் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள மேற்கூறிய தொழிலாளர்களை இந்த அமைப்பின் கீழ் அணிதிரட்டி தொழில் இழந்திருக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கு வேறு வகை தொழில்களை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குமளை செய்வதென்றும் தீர்மானித்துள்ளது. [ஒ]

## கொழும்பு மாநகரசபைத் தேர்தல்: 7 தமிழர்கள் போட்டியிடுகின்றனர்

[கொழும்பு]

கொழும்பு மாநகரசபைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் ஐ. தே. க. சார்பில் இரு தமிழர்களும், சமசமாஜக்கட்சி சார்பில் 5 தமிழர்களும் இடம்பெற்றுள்ளனர்.

கொழும்பு மாநகரசபையின் 53 வட்டாரங்களுக்கு 223 பேர் போட்டியிடுகின்றனர்.

ஐ. தே. க. வின் பட்டியலில் எஸ். கோவிந்தராஜன், ரி. எஸ். திலகஜோதி ஆகியோரும், சமசமாஜக்கட்சியின் பட்டியலில் வி. எஸ். ராஜா, எஸ். சிவப்பிரகாசம், கே. கனகரத்தினம், ஏ. டேவிட் இராசையா, எச். எம். ரஞ்சித்குமார் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். [மா]

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா கனகசபை

திருமதி பொன்னம்மா கனகசபை [உரிமையாளர் யப்பான் ஜுவலர்ஸ்] காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
யப்பான் ஜுவலர்ஸ் ஸ்தாபனத்தார்.
சி-9740

6-7-87

### மரியார்ராசு (மேசன்ராசு)



205/3, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் வசித்துவரும் மேசன் ராசு என்று அழைக்கப்படும் டேவிட்மரியார் ராசு காலமாகிவிட்டார். இவர் றீட்டாவின் அன்புக்கணவரும், அன்ரன், சகாயமேரி, மருசலீன், அஞ்சலா, மலர், ரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியதாஸ், ஆனந்தம், ஜெபமணி ஆகியோரின் அன்பு மாமனுரும் ஆவார். அன்னுரின் பூதவுடல்இன்று செவ்வாய்கிழமை மாலை 3மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி-9742 தகவல்; மகன் அன்ரன்.

### திருமதி சுப்பையா செல்லமுத்து

புங்குடுதீவு 10-ம் வட்டாரம் அம்மன்கோவிலடியைச் சேர்ந்த திருமதி சுப்பையா செல்லமுத்து காலமாகிவிட்டார். இவர் திரு. வேலுப்பிள்ளை சுப்பையாவின் அன்பு மனைவியும், கணேசு, மனோன்மணி, குணபாலலெட்சுமி, வரதலெட்சுமி, காலஞ்சென்ற காந்தி, கனகலிங்கம், மகாதேவன், சரஸ்வதி, வடிவேலு [சுவிஸ்] நாகலெட்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும், பிரபல வர்த்தகர்கள் பொன்னம்பலம், தியாகராசா, சுவாமிநாதன், தேசிய சேமிப்புவங்கி சிவராஜா, வடிவாம்பிகையோகம், விஜயலெட்சுமி, ரஞ்சினிதேவி, மணி, ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரிகைகள் அவரது 'தாயகம்' இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை 7-7-1987 பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சி. சிவராஜா,
'தாயகம்',
புங்குடுதீவு-10.

[சி-9739]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.